பக்கங்கள்: 11

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி10 வியாழக்கிழமை 26.09.2024 கதிர் 323

## இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியக் பொதுக் கட்டமைப்புக்குக் கடைசியில் சங்கூதி விட்டார்கள். ஜனாதிபதித் தேர்தலில் 7 கட்சிகள் 83 பொது அமைப்புக்கள் சேர்ந்து பொதுக் 2

# அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பில் பின்வாங்கோம்

## ஜனாதிபதி அநுர நேற்று நாட்டுக் மக்களுக்கு உரை



அனைவருக்கும் 'நாம் இலங்கைப் பிரஜைகள்' என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை, இந்த நாடு தோல்வியடையுமேதவிரவெற்றியடையாது. அதற்காக அரசமைப்பு ரீதியான, பொருளாதார.அரசியல்மறுசீரமைப்புகளை மேற்கொள்ளஒருபோதும்நாம்பின்வாங்க மாட்டோம் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்னிரவில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் 2

## பொதுத் தேர்தல் தொடர்பிலான சுற்றறிக்கைகள் இன்று வரலாம்

பொதுத் தேர்தல் குறித்து சுற்றறிக்கைகளை இன்று அல்லது நாளை வெளியிடுவோம். ஜனாதிபதித் தேர்தலை சிறந்த முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதை போன்று பொதுத் தேர்தலையும் நடத்துவதற்கு அரச துறைகளினதும், நாட்டு மக்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். 8

## தியாகி திலீபனின் 37ஆவது நினைவுதினம்

இலங்கை, இந்திய அரசுகளுக்கு எதிராகப் பன்னிரு நாட்கள் பட்டினிப் போராட்டம் நடத்தித் தன் உயிரைத் தியாகம் செய்த தியாக தீபம் திலீபனின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று வியாழக்கிழமை தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

பிரதான நினைவேந்தல் நிகழ்வு யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவுத்தூபியில் திலீபனின் உயிர் பிரிந்த முற்பகல் 10.48 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டுத் தொடங்கும். தொடர்ந்து அஞ்சலிநிகழ்வுகள் நடைபெறும்.

இதேநேரம், யாழ். பல்கலைக்கழகம், தீவகம், கிழக்கு மாகாணம் உட்பட வடக்கு, கிழக்கின் பல இடங்களிலும் 8





## 9 ஆளுநர்களும் நேற்று பதவியேற்பு

புதிய மாகாண ஆளுநர்கள் 9பேர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப் பட்டுள்ளனர். அவர்கள் புதன்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர்.

வடக்கு மாகாண ஆளுநராக நாகலிங்கம் வேதநாயகனும் கிழக்கு மாகாண ஆளுநராக பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவும் நியமிக்கப் 9

## மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கதை

மீண்டும்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டுமென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிடம் அக்கட்சியைச் சேர்ந்த ஒரு சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்உள்ள மாவை சேனாதிராசாவின் வீட்டுக்குச் சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களானசிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், சரவணபவன், சிவமோகன், சீ.யோகேஸ்வரன்ஆகியோர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்தச்சந்திப்புக்குறித்து மாவை சேனாதிராசா தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் இருப்பினை பாதுகாக்கும் வகையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தோதலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாக,அதில்ஏற்கனவேஇருந்த கட்சிகளும் பல்கலைக் கழக மாணவர் பேரவை போன்ற அமைப்புக்களும் இணைந்து 8

## யாழ். மாவட்ட எம்.பிக்கள் எண்ணிக்கை குறைப்பு

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை ஒன்று குறைந்துள்ளது. இதுவரை 7 உறுப்பினர்களாக இருந்த எண்ணிக்கை 6ஆகக் குறைந்துள்ளது.

மாவட்டங்கள் தோறும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் களின்எண்ணிக்கைஅடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் இறுதி செய்யப்படும். அதனடிப்படையில் 2024 பதிவு செய்துகொண்ட வாக்காளர் களின் அடிப்படையில் யாழ். மாவட்டத்திற்கு 6நாடாளுமன்ற உறுப்பினர்களே கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், 8

## இலங்கைக்கு வழங்கிய உதவிகளில் அரசியல் நிபந்தனைகள் ஏதுமில்லை

### இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு வழங்கப்பட்ட நிதியுதவிகளின் போது அரசியல் நிபந்தனைகள் எதனையும் விதிக்க வில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித் துள்ளார்.

நியுயோர்க்கில்ஆசியசமூகத்தின் நிகழ்வில்கலந்துகொண்டுஉரையாற் றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்தவேளை நாங்கள் 8

## ஜனநாயகத்தை வலுப்படுத்த

# அடக்குமுறைச் சட்டங்கள் அனைத்தையும் ஜனாதிபதி அநுர ஒழித்தேயாகவேண்டும்

### சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்து

ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டுமாயின் அடக்குமுறை கட்டளை சட்டங்கள் ஒழிக்கப்பட வேண்டும் - சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

வலுவான ஜனநாயக ஆட்சியின் அடித்தளம் அடக்குமுறைக்கு எதிரானது எனச் சுட்டிக்காட்டியுள்ள சுதந்திர ஊடக இயக்கம், புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை அதற்காக அர்ப்பணிப்போடு செயலாற்றுமாறு கேட்டுள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான கௌரவ திசாநாயக்க அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிக்கும் இந்த சந்தர்ப்பத்தில், அவர் உள்ளிட்ட ஆளும் தரப்பு எவ்வாறு செயற்படுகிறது என்பதிலேயே நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் எனச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கடந்த காலங்களில், மக்களின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தி, அதன் மூலம் ஜனநாயகத்தின் உயிர் மூச்சை நசுக்கும் வகையில், பல கட்டளைச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு 8

## கூட்டணியாகப் போட்டியிடுவது குறித்து தமிழ் பேசும் கட்சிகள் இடையே பேச்சு

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

நாட்டில் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் பலமானதொரு கூட்டணியாகப் போட்டியிட எதிர்த்தரப்பிலுள்ள தமிழ் பேசும் கட்சித்தலைமைகள்தீர்மானித்துள்ளன என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில்ஐக்கியமக்கள்கூட்டணியில் பங்காளிக்கட்சிகளாகஇருக்கும்தமிழ்க் கட்சிகளின்தலைவர்களுக்குஇடையில் செவ்வாய்க்கிழமை முக்கிய பேச்சு இடம்பெற்றுள்ளது. இந்தக் கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கட்டமைப்பை அமைத்து அதன் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் சிறீதரன் மூலம் சங்குச் சின்னத்தையும் தேர்ந்தெடுத்து, மற்றொரு மத்திய குழு உறுப்பினர் அரியநேத்திரனை வேட்பாளராக நிறுத்தி, தேர்தலில் கட்டுப்பணத்தையும் இழக்க வைத்த பின்னர், பொதுக் கட்டமைப்புக்கு சங்கு ஊதப்பட்டுவிட்டது.

இந்தப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளில் 5 கட்சிகள் ஏற்கனவே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் 'குத்துவிளக்கு' சின்னத்தில் தம்மக்கிடையில் ஒரு கூட்டணியை அமைத்திருக்கின்றன. அடுத்த பொதுத் தேர்தலை பொதுக்கட்டமைப்பாக அன்றி, இந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பிலேயே எதிர்கொள்வது என்று ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், ஜனநாயகப் போராளிகள் கட்சி, சிறீகாந்தாவின் தமிழ் தேசியக் கட்சி ஆகியன தீர்மானித்துள்ளன.

நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிப் பேசிய இந்தக் கட்சியின் தலைவர்கள் மற்றும் உயர் மட்டக் குழுவினர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கீழேயே பொதுத் தேர்தலை எதிர்கொள்வது என்று உறுதியாகத் தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் பிற்பகல் 3.00 மணிக்குக் கூடிய ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக்குழு, எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது பற்றி விரிவாக ஆராய்ந்தது.

இக்கூட்டத்தில் தலைமைத்துவக்குழு உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம், சுரேஷ் பிரேமசந்திரன், சிறீகாந்தா, சிவநேசன், வேந்தன் உள்ளிட்ட 15 பேர் கலந்துகொண்டிருந்தனர்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கும் நிலையில், எதிர்வரும் பொதுத்தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டு, இறுதியில் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் சார்பிலேயே பொதுத்தேர்தலில் களமிறங்குவது என உறுதியாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக்கொண்டு உருவாக்கப்பட்ட தமிழ் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய தமிழ் மக்கள் பொதுச் சபையினருடன் தமது முடிவு குறித்து இன்று வியாழக்கிழமை கலந்துரையாடுவது என்றும், அவர்களுடைய நிலைப்பாடுகளைக் கேட்டறிவது என்றும், பொதுத் தேர்தலில் அவர்களின் ஆதரவைத் தமக்கு வழங்குமாறு கோருவது என்றும் ஜனநாயகக் கூட்டணியினர் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைத்து எதிர்வரும் பொதுத்தேர்தலில் களமிறங்குவது குறித்து ஆராயப்பட்டுவரும் நிலையில், அது குறித்துப் பரிசீலிப்பீர்களா என புளொட் தலைவர் சித்தார்த்தனிடம் வினவியபோது, தாம் அதில் பங்கேற்கமாட்டோம் எனவும், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியிலேயே போட்டியிடுவோம் எனவும் தெரிவித்தார்.

மேலும் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவீர்கள் என்ற கேள்விக்கு, தமது கூட்டணியில் சின்னமாக 'குத்துவிளக்கு' இருக்கின்றது என்றும் எனினும் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது குறித்து ஜனநாயகக் கூட்டணியின் அடுத்தகட்டக் கூட்டங்களில் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

ஜனநாயகக் கூட்டணியின் இந்தக் கூட்டம் நடப்பதற்கு முன்பாக, தமிழ் அரசுக் கட்சியின் பெயரளவிலான தலைவர் மாவை சேனாதிராசாவை கட்சியின் 'எட்டப்பர்' அணியினர் நேற்றுக் காலையில் சந்தித்துப் பேசினர். தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்பட்ட அரியநேத்திரனை ஆதரித்தவர்கள் இவர்கள். அவர் எதிர்பார்க்கப்பட்டளவுக்குப் போதிய வாக்குகளைப் பெறவில்லை. அதற்குப் பதிலாக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவின் முடிவான சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு என்பதை ஏற்றுக்கொண்டு ஒன்றுகூட மிச்சமில்லாமல் வடக்குகிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் சஜித் பிரேமதாசவை வெற்றிபெற வைத்தனர். இதனால் ஆடிப்போய்விட்ட 'எட்டப்பர்' அணியினருக்கு ஆப்பிறுக்க கட்சி தயாராகி வரும் நிலையில் அவசர அவசரமாகக்கூடி பொதுத் தேர்தலில் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தாம் செய்த எட்டப்பர் வேலையினால் கட்சிக்குள் தமக்கு இனி எதிர்காலம் இல்லை என்பதைப் புரிந்துகொண்ட இவர்கள், அடுத்த சனிக்கிழமை வவுனியாவில் நடக்க இருக்கும் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தம்மை எப்படியும் வைத்துச் செய்வார்கள் என்பதையும் புரிந்கொண்ட நிலையில் அவசர அவசரமாக அடுத்த பொதுத் தேர்தலில் தமக்கொரு புகலிடம் தேட முயற்சிக்கிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கில் சஜித் பெற்ற பெரு வெற்றிக்குப் பின்னர் முழு உற்சாகத்தில் இ-ருக்கும் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற கதைக்கே இடமில்லை என்கிற நிலையில் வேகத்தோடு நிற்கின்றது. கூட்டமைப்பு, ஜனநாயகக் கூட்டணி எல்லாவற்றையும் மோதித் தள்ளி இந்தத் தேர்தலில் தனித்து நின்று ஒரு கை பார்த்துவிடுவது என்பதில் அது உறுதியாகவும் பலமாகவும் ஒற்றுமையாகவும் நிற்கின்றது. கட்சியின் இந்த ஒற்றுமையையும் பலத்தையும் இறுக்கத்தையும் பார்த்து ஆடிப்போயிருக்கும் எட்டப்பர்கள் கூட்டம், கட்சிக்குள் இனித் தங்களுக்கு இடமில்லை, பொதுத் தேர்தலில் எப்படியும் தங்கள் எல்லோரையும் ஒதுக்கித் தள்ளிவிடுவார்கள், அதற்கான வேலைகளையும் தொடங்கிவிட்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டே நேற்று மாவையர் வீட்டில் கூடி தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தக்கவைப்பது குறித்து மந்திராலோசனை நடத்தியுள்ளனர்.

இந்த மந்திராலோசனையின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவையர், கட்சியின் மத்திய செயற்குழுவைச் சேர்ந்த சிறீதரன், யாழ்ப்பாணம் மற்றும் வன்னியைச் சேர்ந்த கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களும் முக்கிய நிர்வாகிகளும் கட்சியின் தலைவர் என்ற முறையில் தன்னைத் தனது வீட்டில் சந்தித்தனர் என்றும் –

நவம்பர் 14 நடக்க இருக்கும் பொதுத் தேர்தலில் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து போட்டியிட வேண்டும் என்று அவர்கள் தன்னிடம் வலியுறுத்தினார்கள் என்றும் –

கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு இந்த விடயத்தைத் தெரியப்படுத்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தேர்தலில் போட்டியிடும் வகையில் கட்சி ஒரு தீர்மானத்தை எடுப்பதற்குத் தான் முயற்சிப்பார் என அவர்களுக்கு உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

இவர்களின் கோரிக்கையை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு ஏற்றுக்கொள்ளும் என்று நான் நினைக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் அரியநேத்திரனை பொதுக் கட்டமைப்பு சார்பில் நிறுத்தி தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவிடம் தோற்றுப் போன நிலையில், ஏற்கனவே கொழுத்துப்போயிருந்த மாட்டுக்குக் கொம்பு சீவிவிட்டமாதிரி துடித்துக்கொண்டிருக்கும் மத்திய செயற்குழு விட்டால் மாவையரையும் சேர்த்துக் குத்திக் கிழிக்குமே

.இடிமின்னல்

(idiminnal@gmail.com)

## அரசியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

பல தசாப்தங்களாக நாம் எழுப்பிய குரலுக்கு மெது மெதுவாக ஆனால் சீராக செவிசாய்த்து, நாங்கள் முன்வைத்த வேலைத்திட்டத்திற்கு உயிர்மூச்சாக இருந்த இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் எங்களது கௌரவத்தைத் தெரிவிக்கிறோம். எங்கள் வேலைத்திட்டத்தில் உடன்படாத தரப்பினர்கூட நாங்கள் அடைந்த வெற்றியால் மகிழ்ச்சி அடைந்தால் மாத்திரமே நீங்கள் அளித்த இந்த வெற்றி மேலும் பலமானதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே, இந்த வெற்றியின் உரிமையை நம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் அர்ப்பணிக்க விரும்புகிறேன். நமது அரசியல் இயக்கத்தின் மீது நம்பிக்கை வைத்து, பல்வேறு அவதூறுகளையும், பொய்யான, திரிபுபடுத்தப்பட்ட தகவல்களையும் ஒதுக்கிவிட்டு, புதிய பரிசோதனைக்கு அஞ்சாமல், எமது அரசியல் இயக்கத்திற்கு நமது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை வழங்கும் அளவிற்கு பெரும் உறுதியுடன் இருந்த பிரஜைகள் உட்பட அனைத்து மக்களுக்கும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பணிக்கு தோள் கொடுப்பதற்கான பலம் இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

இந்த வெற்றிக்காக எமக்கு முன்னரும், எங்களுடனும் பலவிதமான தியாகங்களைச் செய்த, சிலசமயங்களில் தங்கள் உயிரைக்கூட தியாகம் செய்த பல தலைமுறைகளின் விலைமதிப்பற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரையும் நாங்கள் மரியாதையுடன் நினைவுகூருகிறோம். இந்த வெற்றியையும், அதன் மூலம் கட்டியெழுப்பப்படும் வளமான நாட்டையும் அவர்களுக்கு அளிக்கும் கௌரவமாகவே நான் கருதுகிறேன்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பங்கை கூட்டுச்செயற்பாடாக நிறைவேற்றும் திறன் எமக்கு உள்ளது. அதற்கான மிகத் திறமையான குழு எங்களிடம் உள்ளது. நம் அனைவருக்கும் அது குறித்த முழுமையான உறுதிப்பாடு உள்ளது. நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த எத்தகைய மாற்றத்தையும் மேற்கொள்வதற்கு முன்னதாக பொருளாதாரத்தை நிரந்தரமான நிலைக்கு உயர்த்துவது அவசியம் என நாம் நம்புகிறோம்.

அதற்காக நீண்டகால மத்திய கால திட்டங்களைத் தயாரிப்பதற்கு முன்னர், பின்பற்ற வேண்டிய துரித பொருளாதார செயற்பாடுகளின் ஊடாக குறுங்கால ஸ்தீரநிலையை ஏற்படுத்த நாம் நடவடிக்கை எடுப்போம்.

நாம் எதிர்பார்க்கும் மாற்றத்திற்காக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பல நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அவை அனைத்தும் தற்போதைய பொருளாதாரத்தில் ஸ்தீர நிலையையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதில் மாத்திரமே தங்கியுள்ளது. அதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் துரிதமாக பேச்சை ஆரம்பித்து நீடிக்கப்பட்ட கடன் வசதியுடன் தொடர்புள்ள விடயங்களை தொடர்ந்து முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கிறோம்.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, சம்பந்தப்பட்ட கடன் தரப்பினர்களுடன் பேச்சு நடத்தி, அது தொடர்பான பணிகளை விரைவில் நிறைவு செய்து, உரிய கடன் நிவாரணத்தைப் பெறுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதற்கு இந்த நாட்டு மக்களைப் போலவே சர்வதேச சமூகத்தினதும் ஆதரவையும் பெற முடியும் என நம்புகிறோம். அந்த ஒத்துழைப்பின் மூலம் இந்த கூட்டு முயற்சியில் வெற்றி பெற முடியும் என எதிர்பார்க்கிறோம்.

எமக்கு அதிகாரத்தை கையளிக்கையில் 'மாற்றம்' ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணக் கருவே மக்களிடத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. மாற்றம் என எமது நாட்டு மக்கள் கருதுவது அரசியல் முறைமையில் காணப்படும் அனைத்துவிதமான மோசமான பண்புகளை மாற்றுவதையாகும். தற்போது அது நிரூபனமாகியுள்ளது. இந்த நாட்டில் நடைபெற்ற அனைத்துவிதமான தேர்தல்களையும் நோக்கினால், தேர்தலுக்குப் பின்னரான எந்த வன்முறைச் சம்பவமும் நடைபெறாத ஒரேயொரு தேர்தலாக நாம் வெற்றியீட்டிய ஜனாதிபதித் தேர்தலாக வரலாற்றில் இணைக்க முடிந்துள்ளது.

இது நமது நாட்டு மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. இந்த நிலைமையை உறுதிப்படுத்தி நிலைப்படுத்துவது எமது நோக்கமாகும். அரசியலில் அதிகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அதற்காக வியூகம் அமைப்பதற்கும் எவருக்கும் உரிமையுள்ளது. அரசியல் செய்யும் நேரத்தில் அரசியல் செய்வதற்கும், நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய நேரத்தில் அதற்காக ஒன்றிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் இந்த தருணத்தில் வலியுறுத்துகிறேன். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குகிறோம்.

சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், பேர்கராக இருந்தாலும், மலேயராக இருந்தாலும், இவர்கள் அனைவருக்கும் 'நாம் இலங்கைப் பிரஜைகள்' என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை, இந்த நாடு தோல்வியடையுமே தவிர வெற்றியடையாது. அதற்காக அரசமைப்பு ரீதியான, பொருளாதார. அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள ஒரு போதும் நாம் பின்வாங்க மாட்டோம்.

தனது இனம், தனது மதம், தனது வர்க்கம், தனது சாதி என இந்த நாடு பிரிந்திருந்த காலத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, பன்முகத்தன்மையை மதிக்கும் இலங்கை தேசமாக இந்நாட்டைக் கட்டியெழுப்பும் நிலையான, நிரந்தரமான வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பிப்போம்.

இந்த அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்காக அவற்றை செயல்படுத்த அவசியமான செயற்திறன்மிக்க மற்றும் நேர்மையான அதிகாரிகளை நியமிக்கும் பல நடவடிக்கைகளை நாங்கள் ஏற்கனவே நிறைவு செய்துள்ளோம். பொதுப் பணிக்கு இடையூறு ஏற்படாத மற்றும் பிரஜைகள் தொடர்பில் பாதகமான அழுத்தங்கள் ஏற்படாத வகையில் எதிர்பார்த்த மாற்றங்கள் படிப்படியாக மேற்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்வோம்.

சட்டத்தை மதிக்கும் நாட்டை உருவாக்கவும், ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்கவும் நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். அனைத்து பிரஜைகளினதும் சமூக பாதுகாப்பை உறுதி செய்வோம்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற எண்ணக்கருவை மீள உயிர்ப்பிப்போம்.

எமது நாட்டை கட்டியெழுப்புகையில் அரச சேவைக்கு பெரும் பங்கு இருக்கிறது என்பதை நம்புகிறோம்.

பொது மக்களை கண்ணியமாக நடத்தும், ஆளும்தரப்பின் இலக்குகளை நோக்கிச் செல்லும் அரச சேவையை உருவாக்குவோம். செயற்திறன் மிக்க, நேர்மையான மற்றும் ஜனரஞ்சகமான அரச சேவையை உருவாக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே எமது எதிர்பார்ப்பு. அதற்கான நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டம் எங்களிடம் உள்ளது.

மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள அதிக வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தாய்க்கும் தந்தைக்கும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படும் நிலை ஏற்பட இடமளிக்க மாட்டோம்.

தமது பிள்ளைக்கு நல்ல பாடசாலை மற்றும் சிறந்த கல்வியை வழங்க அந்த ஒவ்வொரு பெற்றோருக்கும் உரிமை உண்டு. அனைத்து பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியை வழங்கவும், அடுத்த தலைமுறையை பாதுகாக்கவும் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை மேம்படுத்தி இளைஞர் சமூகத்திற்கு நம்பிக்கை ஏற்படக் கூடிய எதிர்காலத்தை உருவாக்குவோம். எந்த நாட்டிற்கு நாம் சென்றாலும், விமான நிலையத்தின் தன்மையை வைத்து அந்த

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மற்றொரு விசாரணை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாள் கசிந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளுக்காக கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரிகளை வியாழக்கிழமை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணையாளர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய பெரும்பாலான மாணவர்கள் இந்த சம்பவத்தின் காரணமாக எதிர்கொண்டுள்ள அழுத்தம் மற்றும் அவர்களின் மனித உரிமை மீறல் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாக வெளியானதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இதுவரை 2 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகளின்போது வெளிக்கொணரப்பட்ட தகவல்களுக்கு அமைய சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகள் நிறைவடையும் வரையில் புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir




# ஜனாதிபதி தேர்தலில் தான் யாருக்காகவும் யார் சார்பாகவும் நிற்கவேயில்லையாம்

## மக்கள் பக்கம் நின்றேன் என்கிறார் சார்ள்ஸ் நிர்மலநாதன்

ஜனாதிபதி தேர்தலின்போது நான் யாருக்காகவும் யார்சார்பாகவும்எந்தவிடயங்களையும்கூறவில்லை. யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது மக்களின் விருப்பம் என்பதே எனது கருத்தாக இருந்தது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் என்னை சந்தித்து கதைத்தபோது இனவாதமற்ற இலங்கையை, இலஞ்ச ஊழல் அற்ற இலங்கையை உருவாக்குவதற்காகத்தான்பாடுபடுவதாகஎன்னிடம் உறுதி அளித்திருந்தார்.

அந்த வகையில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க தனது உறுதிமொழியை தொடர்ச்சியாக இனவாதம் அற்ற நாடாக இலங்கை மாறுவதற்கும் இலஞ்ச ஊழல் அற்ற நாடாக இலங்கையை கொண்டு வருவதற்கும் மற்றும் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர் நினைவில் வைத்து தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதை நான் அவரிடம் கோரிக்கையாக முன்வைக்கிறேன்.

ஜனாதிபதி தேர்தலின்போது நான் யாருக்காகவும் யார்சார்பாகவும்எந்தவிடயங்களையும்கூறவில்லை. யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது மக்களின் விருப்பம் என்பதே எனது கருத்தாக இருந்தது.

பல்வேறுபட்ட குழப்பங்களுக்கு மத்தியில் இந்த ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

கடந்த 2 வருடங்களாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கதைத்து மன்னார் மாவட்டத்தில் இருந்த சில பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைத்தேன். முல்லைத்தீவிலும் ஏற்பட்ட சில பிரச்சினைகளுக்கு ரணில் விக்கிரமசிங்க ஊடாக தீர்வைப் பெற்றுக்கொடுத்தேன்.

மக்களின் பிரச்சினைகளை நான் அவரிடம் முன்வைத்தபோது சில விடயங்களை சுமுகமான முறையில் தீர்த்து வைத்தார்.

அண்மையில் ரணில் விக்கிரமசிங்க யாழ். மாவட்டத்துக்கு விஜயம் செய்தபோது கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அவர்களின் வீட்டுக்குச் சென்றிருந்தார். அதேபோல் அண்மையில் மன்னாருக்கு வருகின்றபோது எனது வீட்டுக்கு வரவுள்ளதாக கூறியிருந்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளடங்கலாக பல பிரச்சினைகளுக்கு சாதகமானபதிலைதந்ததன்அடிப்படையில்இங்குள்ளமக்களின்பிரச்சினைகளை கலந்தாலோசிக்கும் வகையில் அவரது வருகை அமைந்திருந்தது. அதன் அடிப்படையில் அவர் இங்கு வந்து சென்றிருந்தார்.

இந்நிலையில், அண்மைக்காலமாக என் மீது சிலர் குற்றச்சாட்டுக்களை வைத்து வருகின்றனர் எனத் தெரிவித்தார்.(05)

# ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுடன் சேர்ந்து பொருளாதார சமூக அபிவிருத்திக்கு உதவ தயார்

## சீனா தெரிவிப்பு



இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை. அதன் இறைமையை மதிப்பது என்ற கொள்கையை பின்பற்றியவாறு இலங்கையின் நிலையான பொருளாதார சமூக அபிவிருத்திக்கு உதவுவதற்கு தயார் என சீனா தெரிவித்துள்ளது.

சீனாவின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் லின்ஜியான் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் அனுரகுமார திசநாயக்க ஜனாதிபதியாகதெரிவுசெய்யப்பட்டமை குறித்துகருத்துதெரிவிக்கையிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

செப்ரெம்பர் 21ஆம் திகதி தேர்தல் அமைதியான முறையில் இடம்பெற்றதாக தெரிவித்துள்ள அவர், இலங்கையின் நட்புறவுமிக்க அயல்நாடு என்ற அடிப்படையில் சீனாவும் இலங்கையும் ஒருவரையொருவர் பரஸ்பரம் கௌரவத்துடன் நடத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியா தெரிவுசெய்யப்பட்டுள்ளஅனுரகுமாரதிசநாயக்கவிற்கு சீனா தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது,சீன ஜனாதிபதி தனது வாழ்த்தினை தெரிவித்துள்ளார் என சீனாவின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் லின் ஜியான் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின்கடன்களைதிருப்பிசெலுத்துவதுகுறித்த இலங்கையின் உறுதிப்பாடு குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள அவர் இலங்கையும் சீனாவும் நீண்டகால நட்புறவை பகிர்ந்துகொண்டுள்ளன என தெரிவித்துள்ளார்.

அமைதியானசகவாழ்வின்ஐந்துகோட்பாடுகளின் உணர்வை நிலைநிறுத்துவதற்கும்,இரு நாடுகளிற்கு இடையிலான பாரம்பரிய நட்புறவை முன்னெடுத்து செல்வதற்கும்,எமது அபிவிருத்தி உத்திகளிற்கு இடையில் அதிக பட்ச ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும்,உயர்தர புதிய பட்டுப்பாதை திட்ட ஒத்துழைப்பை ஆழமாக்குவதற்கும்,ஜனாதிபதி திசநாயக்க மற்றும் அவரது நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்ற தயாராகவுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார். (05)

# நிதி அமைச்சின் செயலாளராக மீண்டும் கடமைகளை ஏற்றார் மகிந்த சிறிவர்தன



நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை உருவாக்கம், திட்டமிடல் மற்றும்சுற்றுலாஅமைச்சின் புதிய செயலாளர் எம்.மகிந்த சிறிவர்தன புதன்கிழமை மீண்டும்தனதுகடமைகளை ஆரம்பித்தார்.

திறைசேரியின் பிரதிச் செயலாளர்கள் மற்றும் நிதி அமைச் சின் கீழ் உள்ள திணைக் களங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெறுவதற்கும், இந்நாட்டில் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் வெற்றிக்கும் அவர் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளார்.

அமெரிக்காவின் வாண்டர்பில்ட் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பொருளாதார அபிவிருத்தியில் முதுகலை டிப்ளோமாவையும், களனிப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

சிறிவர்தன ஒரு சிரேஷ்ட அதிகாரியாவார், அவர் மேக்ரோ பொருளாதார மேலாண்மை, பெரிய பொருளாதார முன்கணிப்பு, நாணயக் கொள்கை, மத்திய வங்கி, பொது நிதி மேலாண்மை, பொதுக் கடன் மேலாண்மை மற்றும் நிதி நிரலாக்கம் மற்றும் கொள்கை ஆகிய துறைகளில் பல சர்வதேச பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.(05)

# 3 கிலோ கேரள கஞ்சாவுடன் மன்னாரில் ஒருவர் கைது



மன்னார் மாந்தை மேற்கு பகுதியில் 12 லட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் அவரது இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் தள்ளாடி இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து விற்பனைக்காக பொதி செய்யப்பட்ட 3 கிலோ 570 கிராம் கேரள கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா ஆகியன மேலதிக விசாரணைகளுக்காக இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# வைத்தியசாலையில் உயிரிழந்த தாய்க்கு நீதி கோரி தகராறில் ஈடுபட்ட மகன் கைது

## வைத்தியரும் தாதியரும் காயம்

ராகம வைத்தியசாலையில் உயிரிழந்த தனது தாய்க்கு நீதி கோரி தகராறில் ஈடுபட்ட மகன் கைது செய்யப்பட்டுள்ளார் என ராகம பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த தாய் ஒருவர் நுரையீரல் தொடர்பான நோய் காரணமாகக் கடந்த 22ஆம் திகதி ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், உயிரிழந்த தாயின் மகன் தனது தாய்க்கு முறையான சிகிச்சை வழங்கப்படவில்லை எனவும் தாயை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் கூறி வைத்தியசாலையில் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இந்த தகராறில் வைத்தியசாலையிலிருந்தவைத்தியர்ஒருவரும்தாதியர் ஒருவரும்காயமடைந்துள்ளநிலையில், அவர்கள் அதே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபரான மகன் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ராகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசுத் தலைவரின் பேச்சும் அரசியல் யதார்த்தமும்

அரசுத் தலைவராக அநுரகுமார திஸநாயக்க நேற்றுத் தனது கன்னியுரையை இலங்கை மக்களுக்கு ஆற்றினார். அவரது உரை அழுத்தமானதாகவும் அவரது எதிர்காலச் செல்நெறியின் போக்கைப் புலப்படுத்துவதாகவும் தெளிவாகவும் இருந்தது. தமது அடிப்படைக் கோட்பாடுகளில் இருந்து விலகாதபோதும் பொருளாதார மீட்சி மற்றும் அபிவிருத்தியே தமது முதல் இலக்கு என்பதை அவரது உரை தெளிவுபடுத்தியது. உள்ளூர் மற்றும் பன்னாட்டுச் சமூகங்களுடன் சேர்ந்து அதனை அடைவதில் தமது உறுதிப்பாட்டையும் அவர் வெளிப்படுத்தினார்.

பன்னாட்டு நாணய நிதியத்துடனான கடன் திட்டம் தொடரும் என்பதையும் அதன் சார்பில் எஞ்சியுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பில் பேச்சு நடத்தி அதனை முன்கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார். அதாவது பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவித் திட்டத்தில் இருந்து வெளியேறும் எண்ணம் எ–துவும் தமக்கு இல்லை என்பதை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

”இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பங்கை கூட்டுச்செயற்பாடாக நிறைவேற்றும் திறன் எமக்கு உள்ளது. அதற்கான மிகத் திறமையான குழு எங்களிடம் உள்ளது. நம் அனைவருக்கும் அது குறித்த முழுமையான உறுதிப்பாடு உள்ளது. நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த எத்தகைய மாற்றத்தையும் மேற்கொள்வதற்கு முன்னதாக பொருளாதாரத்தை நிரந்தரமான நிலைக்கு உயர்த்துவது அவசியம் என நாம் நம்புகிறோம்.

நாம் எதிர்பார்க்கும் மாற்றத்திற்காக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அவை அனைத்தும் தற்போதைய பொருளாதாரத்தில் உறுதிப்பாட்டையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதில் மாத்திரமே தங்கியுள்ளது. அதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் துரிதமாக பேச்சை ஆரம்பித்து நீடிக்கப்பட்ட கடன் வசதியுடன் தொடர்புள்ள விடயங்களை தொடர்ந்து முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கிறோம்.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, சம்பந்தப்பட்ட கடன் தரப்பினர்களுடன் பேச்சு நடத்தி, அது தொடர்பான பணிகளை விரைவில் நிறைவு செய்து, உரிய கடன் நிவாரணத்தைப் பெறுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதற்கு இந்த நாட்டு மக்களைப் போலவே சர்வதேச சமூகத்தினதும் ஆதரவையும் பெற முடியும் என நம்புகிறோம். அந்த ஒத்துழைப்பின் மூலம் இந்த கூட்டு முயற்சியில் வெற்றி பெற முடியும் என எதிர்பார்க்கிறோம்.

அதற்காக நீண்டகால மத்திய கால திட்டங்களைத் தயாரிப்பதற்கு முன்னர், பின்பற்ற வேண்டிய துரித பொருளாதார செயற்பாடுகளின் ஊடாக குறுங்கால ஸ்தீரநிலையை ஏற்படுத்த நாம் நடவடிக்கை எடுப்போம்” என்றார் அவர்.

பொருளாதார மறுமலர்ச்சி மட்டுமன்றி இலங்கையை அனைத்து இன, மத மக்களுக்குமான நாடாக மாற்றும் தனது அரசியல் உறுதிப்பாட்டையும் அவர் தனது இந்த உரையில் அவர் வெளிப்படுத்தி நின்றார்.

”எமக்கு அதிகாரத்தை கையளிக்கையில் ’மாற்றம்’ ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணக் கருவே மக்களிடத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. மாற்றம் என எமது நாட்டு மக்கள் கருதுவது அரசியல் முறைமையில் காணப்படும் அனைத்துவிதமான மோசமான பண்புகளை மாற்றுவதையாகும். தற்போது அது நிரூபனமாகியுள்ளது. இந்த நாட்டில் நடைபெற்ற அனைத்துவிதமான தேர்தல்களையும் நோக்கினால், தேர்தலுக்குப் பின்னரான எந்த வன்முறைச் சம்பவமும் நடைபெறாத ஒரேயொரு தேர்தலாக நாம் வெற்றியீட்டிய ஜனாதிபதித் தேர்தலாக வரலாற்றில் இணைக்க முடிந்துள்ளது.

இது நமது நாட்டு மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. இந்த நிலைமையை உறுதிப்படுத்தி நிலைப்படுத்துவது எமது நோக்கமாகும். அரசியலில் அதிகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அதற்காக வியூகம் அமைப்பதற்கும் எவருக்கும் உரிமையுள்ளது. அரசியல் செய்யும் நேரத்தில் அரசியல் செய்வதற்கும், நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய நேரத்தில் அதற்காக ஒன்றிணைந்து செயற்படுவதன்முக்கியத்துவத்தையும்இந்ததருணத்தில்வலியுறுத்துகிறேன். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குகிறோம்.

சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், பேர்கராக இருந்தாலும், மலேயராக இருந்தாலும், இவர்கள் அனைவருக்கும் ‘நாம் இலங்கைப் பிரஜைகள்‘ என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச்சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை, இந்த நாடு தோல்வியடையுமே தவிர வெற்றியடையாது. அதற்காக அரசமைப்பு ரீதியான,பொருளாதார. அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள ஒரு போதும் நாம் பின்வாங்க மாட்டோம்.

தனது இனம், தனது மதம், தனது வர்க்கம், தனது சாதி என இந்த நாடு பிரிந்திருந்த காலத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, பன்முகத்தன்மையை மதிக்கும் இலங்கை தேசமாக இந்நாட்டைக் கட்டியெழுப்பும் நிலையான, நிரந்தரமான வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பிப்போம்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவரது உரை வசீகரம் மிக்கதாகவோ, பெருமை பீற்றுவதாகவோ அன்றி யதார்த்தத்திற்கு மிக நெருக்கமானதாக அமைந்திருந்தது வரவேற்கத்தக்கது. பொருளாதார மறுமலர்ச்சி முக்கியம், முதன்மையாகக் கவனிக்கப்படவேண்டியது அதுவே என்பதும் அதே நேரம் மாற்றம் நிகழ்த்தப்படவேண்டியது அவசியம் என்பதும் அவரது நிலைப்பாடாக இருப்பதும் புரிந்துகொள்ளத்தக்கது. வரவேற்கத்தக்கது. ஆனால் இவையும் மிக இலகுவான பணிகளல்ல. அநுரகுமார நினைக்கும் வகையில் அனைத்தும் இலகுவாக நகரப்போவதுமில்லை என்பதும் யதார்த்தம். அரசியல் சவால்கள் மிகுந்தி–ருக்கும். அதற்கு மத்தியிலும் அவர் தனது இலக்குகளில் இருந்து வழுவாது முன்னோக்கி நகரவேண்டும். இலங்கையின் அரசுத் தலைவர்கள் அனைவரதும் பிரச்சினையே என்னவென்றால் அவர்கள் பேசுவதை அவர்களே நம்புவதில்லை என்பதுதான். அவர்கள் நன்றாகவே பேசுவார்கள், சிறந்த கருத்துக்களை மொழிவார்கள் ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்தமாட்டார்கள். அநுர அந்த விடயத்திலும் மாற்றத்தை நிகழ்த்தவேண்டும். அதுவே இலங்கை மக்களின் எதிர்பார்ப்பு.

# டொனால்ட் டிரம்ப் ஜனாதிபதியானால் உக்ரைன் போரை நிறுத்துவாரா ?

**உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர மாஸ்கோ முன்வைத்த திட்டமும்,ட்ரம்ப்-வான்ஸ் முன்வைத்த திட்டமும் மிகவும் நெருக்கமாகத் தோன்றுகின்றன என நேட்டாவால் கண்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது ரஷ்யா ஆக்கிரமித்த எல்லைக் கோடுகளைப் பராமரிப்பதை ஆதரிப்பதுடன், உக்ரைன் சில பிராந்தியங்களின் கட்டுப்பாட்டை விட்டுக்கொடுக்க வேண்டும்**

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

உக்ரைன்- ரஷ்யா போரை முடிக்க, டிரம்பால் முன்வைக்கப்பட்ட திட்டம் நேட்டோவை விட ரஷ்யாவிற்கே சாதகமான நிலையை உருவாக்கும் என்ற கருத்து ஜனநாயக கட்சியால் தீவிரமாகப் பரப்பப்பட்டு வருகிறது.

உக்ரைன் போரை எவ்வாறு நிறுத்துவது என்பது குறித்து என்னிடம் மிகத் துல்லியமான திட்டம் உள்ளது. ஆனால் என்னால் அந்தத் திட்டங்களை உங்களுக்கு உடனடியாக வெளிப்படுத்தி வழங்க முடியாது. ஏனென்றால் நான் அந்த திட்டங்களை உங்களுக்கு வழங்கினால், என்னால் அவற்றை எதிர்காலத்தில் பயன்படுத்த முடியாது.



ஆனாலும் குடியரசுக் கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளர் ஜேடி வான்ஸ், ஜனாதிபதி பதவிக்கு டொனால்ட் டிரம்ப் திரும்பினால், உக்ரைன்- ரஷ்யா போரை முடிக்க முழுமையான திட்டம் இருக்கிறது என்று கோடிட்டுக் காட்டினார்.

### டொனால்ட் ட்ரம்ப்க்கு கிரெம்ளின் உதவி?

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக 2016இல் வெள்ளை மாளிகையில் நுழைவதற்கு கிரெம்ளின் உதவியது என்று குற்றச்சாட்டு நீண்ட காலமாக உள்ளது.

தற்போதைய தேர்தல் பரப்புரைக்கு மத்தியில், அமெரிக்க அதிபர் தேர்தல் நெருங்கி வருவதால், விரிவான திட்டத்தை பகிரங்கமாக முன்வைக்காமல், ரஷ்யா-உக்ரைன் போருக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்று டிரம்ப் பலமுறை கூறி வருகிறார்.

ஆயினும் வரும் மாதங்களில் கணிசமான உக்ரைனுக்கான நிதி உதவிப் பொதியை தயார் செய்வதாக அமெரிக்கா கூறுகிறது. தொடரும் இந்த மோதலில் வாஷிங்டனின் எதிர்காலப் பாத்திரத்திற்கான ட்ரம்ப் நிர்வாகத்தின் பார்வை எப்படி இருக்கும் என்பது பற்றிய சில விவரங்களை அவரது பங்காளியான ஜேடி வான்ஸ் (ழூம்ாழிஜஉள) இப்போது வழங்கியுள்ளார்.

### உக்ரைனில் டிரம்ப் எங்கே நிற்கிறார்?

முன்னாள் ஜனாதிபதி, உக்ரைனைப் பற்றிய அமெரிக்கக் கொள்கையை பலமுறை விமர்சித்துள்ளார். அமெரிக்காவிற்குப் பயனளிக்காத ஒரு பெரிய அளவிலான, வெளிப்படையான போருக்கு நிதியுதவி மற்றும் ஆயுத உதவியை உக்ரைனுக்கு அளித்து வருகின்றனர் என்று டிரம்ப் வாதிட்டு வருகிறார்.

டிரம்ப் 2020 தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் போர் தொடங்கியிருக்காது என்றும், போரை 24 மணி நேரத்தில் முடிவுக்கு கொண்டு வந்திருக்க முடியும் என்றும் பெருமையடித்துள்ளார்.

### காரசாரமான ஜனாதிபதி விவாதம்:

நடைபெற்ற ஜனாதிபதி வேட்பாளர் விவாதத்தின்போது, நவம்பரில் தான் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஜனவரியில் ஜனாதிபதி ஆவதற்கு முன்பே போரை நிறுத்தச்செய்துவிடுவேன் என்றும் சூளுரைத்துள்ளார்.

போரை நிறுத்தும் திட்டங்களைப் பற்றிய விவரங்களைப் பகிர்ந்து கொள்ள டிரம்ப் தயக்கம் காட்டினாலும், அவரது துணை ஜனாதிபதி போட்டியாளர் சமீபத்தில் அதனை வெளிப்படுத்தி உள்ளார்.

### கிரெம்ளின் - உக்ரைன் பேச்சு:

துணை ஜனாதிபதி போட்டியாளர் வான்ஸின் கூற்றுப்படி, டிரம்ப் நவம்பர் தேர்தலில் வெற்றி பெற்றால் அமைதியான தீர்வை அடையும் நோக்கில், கிரெம்ளின், உக்ரைன் மற்றும் ஐரோப்பிய பங்குதாரர்களுடன் பேச்சுக்களைத் தொடங்குவார்.

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே உள்ள தற்போதைய எல்லைக் கோடு பற்றியும், அது இராணுவமயமாக்கப்பட்ட மண்டலமாக மாறும் என்று கூறினார். ஆயினும் இராணுவமயமாக்கப்பட்ட பகுதியின் இருப்பிடம் அல்லது அளவைப் பற்றி வான்ஸ் விவாதிக்கவில்லை. ஆனால் அது ரஷ்யர்கள் மீண்டும் படையெடுக்காதபடி மிகவும் பலப்படுத்தப்படும் என்று வலியுறுத்தினார்.

அதேவேளை உக்ரைன் அதன் சுதந்திர இறையாண்மையைத் தக்க வைத்துக் கொள்ளவும், ரஷ்யா உக்ரைனிடமிருந்து நடுநிலைமைக்கான உத்தரவாதத்தைப் பெறும். அத்தோடு உக்ரைன் நேட்டோவில் சேராது, அதுதான் ஒப்பந்த முடிவின் இறுதியில் இருக்கும், என்று அவர் கூறினார்.

### கிரிமியா உக்ரைனுக்கு இல்லை?

2014 ஆம் ஆண்டு தாக்குதலுக்குப் பிறகு ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்ட கிரிமியாவை உக்ரைன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வாஷிங்டன் உதவினால், நிறைய ஆபத்துகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என்று முன்னாள் அமெரிக்க கடற்படை வீரரும், துணை ஜனாதிபதி வேட்பாளர் வான்ஸ் கூறியுள்ளார்.

அத்துடன் வருங்காலத்தில் ட்ரம்ப் ஜனாதிபதியானால் விரைவாக ஒரு ஒப்பந்தத்தை எட்ட முடியும் என்று அவர் நம்புகிறார். ஏனெனில் ரஷ்யாவில் அவரைப் பற்றி அறிந்துள்ளார்கள். ஐரோப்பாவில் அவர்கள் அவரைப் பற்றி கவலைப்படுகிறார்கள். ஏனெனில் அவர் உண்மையில் அவர் சொல்வதை புரிந்துகொள்கிறார்கள்.

உக்ரைன் மோதலை ‘நம் காலத்தின்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# டொனால்ட் டிரம்ப் ஜனாதிபதியானால் உக்ரைன் போரை நிறுத்துவாரா ?

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

மனிதாபிமான பணி' என்று பார்ப்பது தவறானது என்றும் 'நன்மை மற்றும் தீமை' ஆகியவற்றுக்கு இடையேயான போராக கருதுவது தவறானது என்ற வான்ஸ் கருத்தும் அமெரிக்க ஊடகங்களில் கண்டிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்திருக்கக் கூடாது, ஆனால் உக்ரேனியர்களுக்கு நிறைய உள்நாட்டு ஊழல் பிரச்சனைகளும் போருக்கான அவசரமும் கூடவே என்றும் துணை ஜனாதிபதி வேட்பாளர் வான்ஸ் கூறியுள்ளார்.

உக்ரைன்போரை முடிவுக்குக்கொண்டுவர மாஸ்கோ முன்வைத்த தொலைநோக்கு திட்டமும், ட்ரம்ப் - வான்ஸ் முன்வைத்த திட்ட வெளிப்புறங்கள் மிகவும் நெருக்கமாகத் தோன்றுகின்றன எனவும் நேட்டாவால் கண்டிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தற்போதைய ரஷ்ய ஆக்கிரமித்த எல்லைக் கோடுகளைப் பராமரிப்பதை அவர் ஆதரிக்கிறார். அதாவது உக்ரைன் அதன் ஆக்கிரமிக்கப்பட்ட சில பகுதிகளின் கட்டுப்பாட்டை விட்டுக்கொடுக்க வேண்டும்.

பிப்ரவரி 2022 இல் உக்ரைன் மீதான படையெடுப்பைத் தொடங்கிய சில மாதங்களுக்குள், ரஷ்யா உக்ரைனின் பல பகுதிகளை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. இதில் லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க், கெர்சன் மற்றும் சபோரிஷியா பகுதிகள் முக்கியமாகும். அதன்பின்னர் பொது வாக்கெடுப்புகள் மூலம் கிரெம்ளினுக்கு விசுவாசமான அதிகாரங்களை ரஷ்யா நிறுவியது.

2014ல் இருந்து உக்ரைனின் சுமார் 20 சதவீதத்தை ரஷ்யா இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது. எந்தவொரு சமாதான திட்டமும் தரையில் உள்ள யதார்த்தத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று ரஷ்யா வலியுறுத்துகிறது.

ஆனால் உக்ரைன் எந்த ஒரு சமாதான உடன்படிக்கையானாலும் அதன் அனைத்துப்பகுதிகளின் ரஷ்யா ஆக்கிரமித்த இணைப்புகளையும் செல்லாததாக்க வேண்டும் என்று கூறியுள்ளது. இதில் கிரிமியாவை இணைத்ததை ரத்து செய்து கிய்வின் கட்டுப்பாட்டிற்கு திரும்புவதும் அடங்கும்.

**உக்ரைனுக்கு கூடுதலான நிதி:**

உக்ரைனுக்கு கூடுதலான நிதி மற்றும் ஆயுதங்களுக்காகவும், மேற்கத்திய இராணுவக் கூட்டணியில் அங்கம் வகிக்கவும் நாடுகள் கடுமையாக அமெரிக்காவை அழுத்தம் கொடுத்து வருகின்றன. உக்ரைனை நேட்டோவின் 32 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டணியில் நுழைவதற்கான பாதை என்றும் அண்மையில் உறுதியளித்தது.

போரை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரும் ட்ரம்பின் கூற்றுக்கள் குறித்து அவநம்பிக்கையை கிரெம்ளின் வெளிப்படுத்தியுள்ளது. மாஸ்கோவில் அரச செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் இந்த வகையான சிந்தனை 'கற்பனையின் எல்லைக்குள்' வரும் என்று ட்ரம்பை விமர்சித்து கூறியுள்ளார்.

**மாஸ்கோ கமலா ஹாரிஸுக்கு ஆதரவு?**

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்த மாத தொடக்கத்திலும் கமலா ஹாரிஸ் பிரச்சாரத்தை தொடர்வதாக (ட்ரோல்) செய்வதாகத் தெரிய வந்தது. இதனை மாஸ்கோ அவரை ஆதரிப்பதாக என்றும் சிலர் கூறினார். ஒருவேளை கமலா தெரிவானால், அவர் ரஷ்யா மீது மேலும் தடைகளை விதிக்க மாட்டார் என்றும் புட்டின் கருதுவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

# ஜனாதிபதி ஊடக பணிப்பாளர் நாயகமாக வைத்தியர் நஜித் இந்திக்க நியமனம்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகமாக வைத்தியர் நஜித் இந்திக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை ரன்ன மத்திய கல்லூரி மற்றும் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவரான வைத்தியர் நஜித் இந்திக்க, கொழும்பு மருத்துவ பீடத்தில் தனது மருத்துவ பட்டப்படிப்பை நிறைவு செய்தார்.

கடந்த 05 வருடங்களில் பல அரச வைத்தியசாலைகளில் வைத்தியராகவும் வைத்திய அதிகாரியாகவும் இவர் கடமையாற் றியுள்ளார்.

வைத்தியர் நஜித் இந்திக்க, பல்கலைக்கழக மாணவர் செயற்பாட்டாளர் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

# 5 வயது சிறுமியை பலாத்காரம் செய்யமுயன்ற சிறுவன் கைது

5 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற சிறுவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளார் என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

17 வயதுடைய சிறுவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

கடந்த 22 ஆம் திகதி அன்று இரவு இந்த சிறுமி தனது தந்தையுடன் உறங்கிக் கொண்டிருந்துள்ள நிலையில் சிறுமியின் தாய் சுகவீனம் காரணமாக வேறொரு அறையில் உறங்கிக்கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, சிறுமியின் வீட்டிற்கு அருகில் உள்ள மற்றுமொரு வீட்டில் வசிக்கும் 17 வயதுடைய சிறுவன் ஒருவன் சிறுமியின் வீட்டிற்குள் நுழைந்து, சிறுமியை அருகில் உள்ள வயல் வெளிக்குச் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளார்.

சிறுமி வீட்டில் இல்லாததை அறிந்து கொண்ட சிறுமியின் பெற்றோர் சிறுமியைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள நிலையில் சிறுமியின் அலறல் சத்தம் கேட்டு வயல் வெளிக்குச் சென்று பார்த்துள்ளனர்.

இதன்போது, இந்த சிறுமி மிகவும் அச்சத்துடன் வயல் வெளியில் தனிமையிலிருந்துள்ளார்.

இதனையடுத்து, சிறுமியின் பெற்றோர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

பின்னர், விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேக நபரான சிறுவனைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரான சிறுவன் இந்த சிறுமியை கடத்திச்சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி பரிசோதனைக்காக களுபோவில போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகவில்லை என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பிலியந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளைக் களைவதற்கு அநுர அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுப்பார்

## கனேடிய தமிழர் பேரவை நம்பிக்கை

சமத்துவம், நீதி மற்றும் பிரதிநிதித்துவம் ஆகிய விடயங்களைப் பொறுத்தமட்டில் இலங்கைவாழ் தமிழ் மக்கள் குறிப்பிடத்தக்களவிலான சவால்களுக்கு முகங்கொடுத்துவருகின்றார்கள். எனவே தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், இலங்கையின்எதிர்காலத்தைக்கட்டியெழுப்புவதில்அவர்களின் முழுமையானபங்கேற்பைஉறுதிப்படுத்துவதற்கும்ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என கனேடிய தமிழர் பேரவை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துக்கூறி கனேடிய தமிழர் பேரவையால் வெளியிடப்பட்டுள்ளஅறிக்கையில்மேலும்கூறப்பட்டிருப்பதாவது

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப் பட்டிருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எமது வாழ்த்துக்களைக் கூறுகின்றோம். இலங்கையின் அரசியல் வரலாற்றில் அவரது வெற்றி மிகமுக்கியமானது என்பதுடன், இது மக்கள் மாற்றத்தையும், மறுசீரமைப்பையும் விரும்புவதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவாலும், தேசிய மக்கள் சக்தியாலும் நிலைமாற்றத்தை முன்னிறுத்தி நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களை நாம் அங்கீகரிக்கிறோம்.

புதிதாக பொறுப்பேற்றிருக்கும் ஜனாதிபதி என்ற ரீதியில், அவரது அரசாங்கம் தமிழ்ச்சமூகத்தின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளுக்குரியதீர்வைவழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம். சமத்துவம், நீதி மற்றும்பிரதிநிதித்துவம்ஆகியவிடயங்களைப்பொறுத்தமட்டில் இலங்கைவாழ் தமிழ் மக்கள் குறிப்பிடத்தக்களவிலான சவால்களுக்கு முகங்கொடுத்துவருகின்றார்கள்.

எனவேதமிழ்மக்களின்உரிமைகள்பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், இலங்கையின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் அவர்களின் முழுமையான பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுப்பார் எனத் நம்புகின்றோம். அபிவிருத்தி, பாதுகாப்புசார் கரிசனைகள், நிலையான சமாதானத்தையும், ஒருமைப்பாட்டையும் ஊக்குவிக்கக்கூடியவகையில் கடந்தகால மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் என்பனவும் இதில் உள்ளடங்கும்.

அதன்படி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமைத்துவத்தின்கீழ் ஊழல் மோசடிகள் அற்ற, அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து வாழக்கூடிய எதிர்காலத்தை நோக்கி இலங்கை பயணிக்கும் என நாம் நம்புகின்றோம். நேர்மையானதும், அனைவரையும் உள்ளடக்கியதும், தமிழ் மக்கள் உள்ளடங்கலாக சகல இலங்கையர்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடியவகையிலும் நாட்டை முன்கொண்டுசெல்வதற்கு வழங்கப்பட்ட ஆணையை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பயன்படுத்தவேண்டும் என நாம் கோருகின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# புலமைப் பரிசில் வினாத்தாள் கசிவு; ஆசிரியர் ஒருவர் சந்தேகத்தில் கைது

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் முதலாம் பாகம் வினாத்தாளில் ஐந்து வினாக்கள் வட்சப் மூலம் கசிந்தமைதொடர்பில்ஆசிரியரொருவர்செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் குருநாகலை பகுதியைச்சேர்ந்த 49 வயதுடையவராவர்.

புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின்பெற்றோர்கள் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் புதன்கிழமை கடுவலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார் என குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.(05)

# களுதாவளையிலுற்ற வீட்டிலிருந்து குடும்பப் பெணின் சடலம் மீட்பு



மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளை 4 ஆம் பிரிவு பாலர் பாடசாலை வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து குடும்பப் பெண் ஒருவர் சடலமாக செவ்வாய்க்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளார் என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர் 44 வயதுடைய சசிகுமார் கௌரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் கணவன் மனைவி ஆகிய இருவரும் வசித்து வந்துள்ளனர். எனினும் கணவன் மனைவி இருவருக்கும் இடையிடையே தகராறுகள் இடம்பெற்று வருவதாக அயலவர்கள் தெரிவித்தனர்.

குறித்த குடும்பப் பெண் தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வருகின்றார். சம்பவதினமான செவ்வாய்க்கிழமை தனது மகள் வேலைக்குச் சென்றுள்ளார் என நினைத்துக் கொண்டு அவரது தாயார் உயிரிழந்த மகளின் தொலைபேசிக்கு பலதடவை அழைப்பெடுத்துள்ளார். எனினும் அவரது தொலைபேசி இயங்கவில்லை. உயிரிழந்த பெண்ணின் சகோதரன் தனது அக்காவின் வீட்டிற்குச் சென்று பார்த்தபோது அவரது வீடு பூட்டப்பட்டிருந்தது. ஆனாலும் அக்காவின் செருப்பு வீட்டின் முன்னால் கிடந்துள்ளன.

சந்தேகம் கொண்ட சகோதரன் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்ததற்கு இணங்க வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு வீட்டிற்குள் சென்று பார்த்தபோது படுக்கையிலே இரத்தத்தில் தோய்ந்த நிலையில் தனது அக்கா இறந்த நிலையில் கிடந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடி பொலிஸார், மட்டக்களப்பு குற்றத் தடுப்பு பிரிவினர், கைரேகை தடயவியல் பிரிவினர், உள்ளிட்ட பலரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பின்னர்சடலத்தைப்பார்வையிட்டகளுவாஞ்சிகுடிநீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.றஞ்ஜித்குமார் சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று பிரேத பரிசோதனைக்குப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்த பெண்ணின் கணவர் தலைமறைவாகியுள்ளார். குறித்த பெண் அவரது கணவரால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் அவரது கணவரையும் தேடி வருகின்றனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

### இரு தரப்பினருக்கு இடையில் தகராறு ;

# வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பயனின்றிப் பரிதாபச் சாவு

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு மீண்டும் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நபரொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என வில்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஆர். ஜி . புஷ்பதேவ என்ற 68 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

மாத்தளை, வில்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட குழு ஒன்று மது போதையில் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது, உயிரிழந்த நபருக்கும் சந்தேக நபர்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதன்போது, இந்த தகராறு எல்லை மீறியதில் சந்தேக நபர்கள், உயிரிழந்த நபரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து, காயமடைந்தவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.வில்கமுவ பிரதேசத்தில் வசிக்கும் 30 மற்றும் 36 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வில்கமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் கடமைகளை ஏற்றார்

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் நேற்று (புதன்கிழமை) தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

செவ்வாய்க்கிழமை வெளிவிவகார, பொது பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு, பௌத்த விவகார அமைச்சராக விஜித ஹேரத் நியமிக்கப்பட்டார்.

அத்தோடு, ஊடக, சமூக பாதுகாப்பு, சிவில் விமானப் போக்குவரத்து, ஊடகத் துறை போக்குவரத்து அமைச்சுகளும் விஜித ஹேரத்துக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# தொழில்நுட்பக் கோளாறு காரணமாய் நடு வழியில் நின்ற அலுவலக தொடருந்து




கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த அலுவலக ரயில் ஒன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பங்கதெனிய - மானுவன்கம பிரதேசத்தில் இடைநடுவில் நின்றுள்ளது.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இதன்காரணமாக, குறித்த அலுவலக ரயிலில் பயணித்த பயணிகள் அனைவரும் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். (05)

# அமைச்சர் விஜித ஹேரத்துக்கு கென்யப் பிரதமர் வாழ்த்து



கென்யாவின் பிரதம அமைச்சரவை செயலாளரும் வெளிவிவகார அமைச்சு மற்றும் புலம்பெயர் விவகாரங்களுக்கான அமைச்சு ஆகியவற்றின் செயலாளருமான கலாநிதி முசலிய முதவடி வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

முசலிய முதவடி கென்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான மற்றும் நட்பு உறவை தனது வாழ்த்து செய்தியில் பாராட்டியுள்ளார்.

அத்தோடு, இராஜதந்திர தொடர்புகள் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இந்த உறவுகள் எவ்வாறு தொடர்ந்து வளர்ந்து வருகின்றன என்பதைக் குறிப்பிட்டார்.

இது கென்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான நட்பு உறவுகள், இராஜதந்திர உறவுகள் எவ்வாறு தொடர்ந்து வளர்ந்து வருகின்றன என்பதைக் குறிப்பிடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான கென்யாவின் வரலாற்று உறவை எடுத்துரைத்து இரு நாடுகளின் நலனுக்காக இந்த பிணைப்புகளை மேலும் வலுப்படுத்த கென்யாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

பரஸ்பர நலன்களை முன்னெடுத்துச் செல்வதிலும், இரு நாடுகளுக்குமிடையில் ஆழமான ஒத்துழைப்பை வளர்ப்பதிலும் கென்யா உறுதுணையாக இருக்கும் என வலியுறுத்தியுள்ளார்.

(05)

# நாடாளுமன்ற வாயில் அருகில் இராணுவ வாகனம் விபத்து



இராணுவத்திற்கு சொந்தமான டிபென்டர் வாகனம் புதன்கிழமை அதிகாலை நாடாளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்காரணமாக நாடாளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் உள்ள வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பெலவத்தையில் இருந்து நாடாளுமன்ற வீதியின் ஊடாக பொரள்ளை நோக்கிப் பயணித்த டிபென்டர் வாகனம் ஒன்று சதுப்பு நிலத்தில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது டிபென்டர் வாகனத்தில் சாரதி மட்டுமே இருந்துள்ளதாகவும் அவருக்கு காயங்கள் ஏதுவும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இராணுவத்தினரின் உதவியுடன் சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் இராணுவ வாகனம் சதுப்பு நிலத்திலிருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# புதிய ஜனாதிபதிக்கு சவூதி மன்னர் வாழ்த்து



இரண்டு புனிதத் தலங்களின் சேவகரும், சவூதி மன்னருமான ஸல்மான் பின் அப்துல் அஸிஸ் அல் ஸஊத் மற்றும், முடிக்குரிய இளவரசரும் சவூதி பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் ஆகியோர் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ள அனுர குமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு வெற்றிகரமான ஆட்சி மற்றும் இலங்கை மக்களுக்கு மேலும் முன்னேற்றமும் வளமும் கிடைக்க வேண்டுமென பிராத்திப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (05)

# விஜித ஹேரத்திற்கு ஜெய்சங்கர் வாழ்த்து



இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள விஜித ஹேரத்திற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக பதிவில் இதனைத் தெரிவித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர், இந்திய இலங்கை இடையிலான நாகரீக உறவுகளை வலுப்படுத்துவதற்கும், இரு நாடுகளிற்கும் இடையிலான பாரம்பரியமான நெருக்கமான நட்புறவை வலுப்படுத்துவதற்கும் தனது அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## அரசியல்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு குறித்து ஒரு கண்ணோட்டைத்தை உருவாக்கமுடியும். அதன் ஒழுங்கு, மக்களின் நடத்தை, செயல்பாடு, போன்றவற்றின் மூலமும் மறைமுகமாக அந்த நாட்டின் இயல்பு எடுத்துக் காட்டப்படுகின்றது.

அதையும் தாண்டி சுற்றுச்சூழலின் தூய்மை, வீதிகளில் வாகனங்கள் செல்லும் விதம், முதியோர்களை நடத்தும் விதம், விருந்தோம்பல் செய்யும் முறை, விலங்குகள் எப்படி நடத்தப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்த முடியும். நம்நாட்டின்பிம்பத்தை அதே வகையில் தெளிவாக தெரியும் வகையில் கட்டியெழுப்ப நாம் திட்டங்களை தயாரித்து முடித்துள்ளோம். அந்த உருவாக்கத்திற்காக குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த நாட்டின் கடவுச்சீட்டை உலகமே மதிக்கும் நிலைக்கு, நாம் நாட்டை கட்டியெழுப்புவது அவசியம். இந்த நாட்டின் பிரஜைகளுக்கு 'நான் இலங்கையர்' என்று பெருமையுடன் கூறக்கூடிய நாட்டை உருவாக்குவது அவசியம். இந்த நாட்டின் பிரஜையாக இருப்பது பெருமை என்று நம் நாட்டு மக்கள் உணரும் வகையில் இந்த நாட்டை உருவாக்குவது அவசியம். அதற்கு உங்களின் கூட்டுப் பங்களிப்பு தேவை.

அனைத்து பிரஜைகளுக்கும் சமூகநீதியை நிறைவேற்றும் அரசொன்றை உருவாக்க நாம் பொறுப்புடன் பங்களிக்கிறோம். அறிவு, திறன்கள், கல்வி மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை

ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தின் மூலம் எமது சிறுவர்கள் மற்றும் இளைஞர் சந்ததிக்கு நம்பகமான எதிர்காலத்தை நாம் கட்டியெழுப்புவோம்.

நமது நாட்டின் சனத்தொகையில் ஐம்பத்திரண்டுவீதத்தைத்தாண்டிய பெண்கள் சமூகம், இந்நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூகச்செயல்பாட்டிற்கு பெரும் பங்களிப்பைச் செய்யும்குழுவாகும். பெண்கள்பிரதிநிதித்துவம் தொடர்பாக அனைவரும் ஒன்றிணைந்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு நாம் செல்வோம்.

சகல நிறுவனங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை பலப்படுத்துவதற்கு நாம் செயற்படுவோம்.

அதற்கான எமது அர்ப்பணிப்பின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்தும் வகையில்ஏற்கெனவேஎமதுபிரதமர்பதவிக்கு பெண் ஒருவரை நியமித்துள்ளோம். எமது சனத்தொகையில் பெருந்தொகையானோர் ஊனமுற்று விசேட சமூக பாதுகாப்பு கிடைக்க வேண்டியவர்களாகும். அவர்களுக்காக பலமானசமூகபாதுகாப்புகட்டமைப்பொன்றை நாம் திட்டமிட்டுள்ளதோடு அதன் குறுங்கால நடவடிக்கையை விரைவாக ஆரம்பிப்போம்.

நாம் செல்லும் பயணத்தில் சமூக கட்டமைப்பின் எந்தவொரு பகுதியையும் கைவிடப்போவதில்லை என்பதற்கு நாம் பொறுப்பு கூறுகிறோம். ஒவ்வொருவரினதும் தனித்துவத்திற்கு மதிப்பளித்து அவற்றை நாட்டின் முன்னேற்றத்துக்காக சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்ள எமது பங்களிப்பை வழங்குவோம்.

மக்கள் இறைமைக்கு மதிப்பளிக்கும் அதேநேரம், அவர்களின் ஜனநாயக உரிமைகளைபாதுகாப்பதற்காகஅர்ப்பணிப்போம். எம்மீதான சந்தேகம் காரணமாக நிச்சயமற்ற நபர்கள் இருப்பதை நாம் அறிவோம். எனது செயற்பாடுகளின் ஊடாக உங்களின் நம்பிக்கையை வெல்ல எதிர்பார்க்கிறேன்.

உங்களுடைய விமர்சனங்களை பொருத்தமானதருணத்தில்ஏற்றுக்கொள்வேன். அதேபோல் நாங்கள் கட்டியெழுப்ப போகும் எதிர்காலத்தின் பங்குதாரர்களாக உங்களை வலுவூட்டுவோம். எமக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளை களைய முடியுமானால், நமக்கிடையிலான இலக்கு சமமானவை என நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

அதன் ஊடாக நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடியைஏற்றுக்கொள்ளவும்அதன்ஊடாக முன்னோக்கிச் செல்வதற்குத் தேவையான மூலோபாயங்களை இணைந்து திட்டமிடவும் முடியும்.

இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்காக காத்திரமாகவும்நேர்மையாகவும் இணையும் அனைவருக்கும்எமதுகதவுகள்திறந்துள்ளன. மக்களின் ஆணைக்கு அமைவான பாராளுமன்றம் ஒன்று அவசியப்படுகிறது. இறுதியாக இருந்த நாடாளுமன்றம் மக்கள் ஆணையை திரிபுபடுத்தியதாகக் காணப்பட்டது. அதனால் நேற்றைய தினம் நாடாளுமன்றத்தைக் கலைக்க நடவடிக்கை எடுத்தேன்.

அரசமைப்புக்கு அமைவாக நாட்டை கொண்டு செல்வதற்காக எமது நாடாளுமன்ற பிரநிதித்துவத்திற்கு அமைவாக அமைச்சரவை ஒன்றை நியமித்தேன். அன்றாடம் சூரியன் உதிக்கும் ஒவ்வொரு பொழுதிலும் மக்கள் காணும் கனவுகள் உள்ளன. அது இன்று இருப்பதை விடவும் சிறந்த நாடாகும்! ஆனாலும், பல வருடங்களாக அது கனவாகவே போய்விட்டது என்பதையும் நானும் அறிவேன்.

சந்தர்ப்பவாதம், அதிகார மோகம், சர்வாதிகாரம் மற்றும் இனவாதம் காரணமாக எமது நாட்டை மேலும் உயர்த்தி வைக்க எம்மால் முடியாமல் உள்ளது..!

இருப்பினும், எமக்கு வரலாற்றில் நழுவவிட முடியாத சந்தர்ப்பமொன்று கிடைத்திருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல்வகைத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் செழிப்பான நாட்டை கட்டியெழுப்புவோம் – என்றார்.

## கூட்டணியாகப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமானும்கூடக் கலந்துகொண்டிருந்தனர். நேற்று மாலை முஸ்லிம்காங்கிரஸின்தலைவர்ரவூப்ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்புக் குறித்துக் கேள்வி எழுப்பியபோதே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தவிர்ந்த ஏனைய சகல கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாட நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அரசியல்தலைவர்கள் யாரின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபடப் போகிறோம் என்பதைவிட பரந்துபட்ட கூட்டணியாகஇணையவேமுயற்சிக்கிறோம். நிச்சயமாக நாட்டின் ஜனநாயகத்தை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டுமெனில் ஒரு தரப்புக்கு மாத்திரம் அதிகாரத்தை வழங்கக்கூடாது. நிறைவேற்றதிகாரத்தை ஒருபுறமும் நாடாளுமன்ற அதிகாரத்தை மறுபுறமும் வைத்தால் ஜனநாயகத்துக்கு சிறப்பாக இருக்கும். ஜனநாயகம் மேலும் பலமடையும்.

அநுரகுமார திசாநாயக்க நாட்டை முன்னெடுத்துச்செல்லவும்பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் எங்களால் முடிந்த அதிகபட்ச ஒத்துழைப்பை எங்களின் கொள்கைகளின் அடிப்படையில்வழங்கத்தயாராகஇருக்கிறோம். இருந்தபோதும் நாடாளுமன்றத்தில் ஒரு சமத்துவம் இருக்கவேண்டும். விசேடமாக பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் எங்களுக்கும்பொறுப்பு இருக்கிறது. அதனால், எதிர்த்தரப்பிலுள்ள சகலத் தரப்பினரையும் இணைத்துக்கொண்டு பலமான ஆளும்தரப்பு ஒன்றை உருவாக்குவதே எங்களின் தேவையாகும்.

ஏனையசிறியகட்சிகளின்தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளோம். குறிப்பாக மனோ கணேசன், சுமந்திரன் உள்ளிட்ட தரப்பினருடன் இணைந்து பேச்சு நடத்தியுள்ளோம். செந்தில் தொண்டமானும் என்னைச் சந்திக்கவுள்ளார். இடதுசாரிக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் தரப்பினராக நாங்கள் எம்மைக் கட்டியெழும்பியுள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் ஜனநாயகத்துக்கு சிறந்த அடையாளமாக அமைந்துள்ளன. வன்முறைகளற்ற அமைதியான புரட்சியொன்று ஏற்பட்டுள்ளது. அதற்கு தலைவணங்குகிறோம் என்று ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

## யாழ். மாவட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின்நாடாளுமன்றஉறுப்பினர்களின் எண்ணிக்கைதொடக்கத்தில்9ஆகஇருந்தது. பின்னர் அது 7 ஆகக் குறைந்தது தற்போது 6 ஆகக் குறைந்துள்ளது.

பொதுத்தேர்தலில்ஒவ்வொருமாவட்டத்தில் இருந்தும்தேர்ந்தெடுக்கப்படும்நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் வேட்புமனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

## மீண்டும் தமிழ்த் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடவேண்டும்என்றதமதுவிருப்பத்தை, யோசனையை அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

அவர்களின் கோரிக்கையை மத்திய செயற்குழுவிற்கு சமர்ப்பித்து, கட்சி அத்தகையதொருதீர்மானத்தைஎடுப்பதற்குத் நான் நடவடிக்கை எடுப்பேன் என்று அவர்களுக்கு உறுதியளித்திருக்கின்றேன் – என்றார் மாவை சேனாதிராசா.

நடைபெற்று முடிவடைந்த ஜனாதிபதி தேர்தலில் கட்சிகளின் மாறுபட்ட நிலைப் பாடுகளால் ஏற்பட்ட பிரதிபலன்களை அவதானிக்க முடிவதாகவும் ஆகவே ஒன்றுபட்டுச்செயற்படுவதுதான்தமிழ்மக்களின் பிரதிநிதித்துவத்தினைஉறுதிப்படுத்தும்என்றும் சந்திக்க வந்தவர்கள் சேனாதிராசாவிடம் வலியுறுத்தியுள்ளனர் என்றும் –

இதற்காகத்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் அங்கத்துவத்தினைக் கொண்டிருந்த கட்சிகளுடன்பேச்சுக்களைமுன்னெடுப்பதற்கு மாவை சேனாதிராசா ஏகமனதாக இவர்களால் முன்மொழியப்பட்டுள்ளார் என்றும் –

சந்திக்க வந்தவர்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

## அடக்குமுறைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றில் ஆன்லைன் கணினி பாதுகாப்புச் சட்டம், முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், மேலும் வரைவு செய்யப்பட்ட புதிய தொழிலாளர் சட்டங்கள் ஆகியவை அடங்கும். சுதந்திர ஊடக இயக்கம் உட்பட பிற ஊடக மற்றும் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள், பல சந்தர்ப்பங்களில் இத்தகைய அடக்குமுறைக்கட்டளைசட்டங்கள் – அரசமைப்பு ரீதியான ஜனநாயகத்திற்கு ஒரு மரண அடியாகும் என்பதை சுட்டிக்காட்டி, இத்தகைய அடக்குமுறை கட்டளைச் சட்டங்களை இரத்து செய்ய கோரிக்கை விடுத்தன, நீதித்துறை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன. பல சந்தர்ப்பங்களில் அவற்றை ரத்து செய்ய வேண்டிய கட்டாயமும் அரசுக்கு ஏற்பட்டது.

இந்தப் பின்னணியில், அனைத்து அடக்குமுறை கட்டளைச் சட்டங்களையும் இரத்துச்செய்யகிடைத்திருக்கும்சந்தர்பமானது புதியஜனாதிபதிக்குஜனநாயகத்திற்கானதனது உண்மையான அர்ப்பணிப்பை நிரூபிக்க கிடைத்திருக்கும் ஒரு பொன்னான வாய்ப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகிறது.

கடந்தஆட்சிக்காலத்தில்ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி வழங்குவதற்காக முழுமையான ஜனாதிபதி ஆணைக்குழு/உண்மை கண்டறியும் ஆணைக்குழுவை நியமிக்கவும் சுதந்திர ஊடக இயக்கம் முன்மொழிந்தந்தை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

அரச ஊடகங்களை பக்கச்சார்பற்ற மற்றும் சுயாதீனமான பிரஜை ஊடகமாக மாற்றியமைப்பதும்சமூகப்பொறுப்புணர்வை மையமாகக் கொண்ட ஊடகவியலில் ஈடுபடுவதற்கு அனைத்து ஊடகங்களுக்கும் தேவையான சீர்திருத்தங்களை முன்மொழிவதற்குசுயாதீனமானபொறிமுறையொன்றை உருவாக்குவதும் அவசரத் தேவையாகும்.

30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், சுதந்திர ஊடக இயக்கம் விரிவான ஊடக சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. எனினும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படை நிபந்தனை என்னவென்றால் அடக்குமுறைகட்டளைச்சட்டங்களைஒழித்து ஊடகங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அனைத்து வடிவிலான குற்றங்களுக்கும் நீதி வழங்குவதும் ஆகும்.

## தியாகி திலீபனின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் இடங்களிலும் திலீபனை நினைவேந்தும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இராசையாபார்த்தீபன்என்றஇயற்பெயரை கொண்ட திலீபன் 1963ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி யாழ்ப்பாணம் - ஊரெழுவில் பிறந்தவர். புலிகள் அமைப்பில் இணைந்த அவர், பின்னர் அதன் அரசியல்துறைப் பொறுப்பாளராகவும் பதவி வகித்தார். இந்திய அமைதிப் படை நாட்டில் நிலைகொண்டிருந்தபோது 5 கோரிக்கைகளை முன்வைத்து பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மீளக்குடியமர்தல்என்றபெயரில்வடக்கிலும், கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களைத்தடுத்துநிறுத்தவேண்டும், சிறைக் கூடங்களிலும் இராணுவ - பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும், தமிழர்பிரதேசங்களில் புதிதாகப் பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்குமேற்கொள்ளப்படும்நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி உணவு - நீரைத் தவிர்த்து பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

இந்தக்கோரிக்கைகள்நிறைவேற்றப்படாத நிலையில் 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி முற்பகல் 10.48 மணிக்கு அவர் உயிர்பிரிந்தது.

## இலங்கைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவ முன்வந்தோம், வெளிப்படையாகச் சொல்வதென்றால் யாரும் உதவ முன்வராதபோதுநாங்கள்உதவமுன்வந்தோம் என்று தெரிவித்தார்.

"நாங்கள் இதனை செய்தோம் என்பது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். தக்க தருணத்தில் குறிப்பிடத்தக்க அளவில் நாங்கள் உதவினோம். 4.5 மில்லியன் டொலர் வலுவான ஆதரவை வழங்கினோம்" என ஜெய்சங்கர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை ஆளும் தரப்பில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் (கேள்வி கேட்டவர் இந்த ஆட்சி மாற்றம்இந்தியாவிற்குபாதகமாகஅமையலாம் என தெரிவித்தார்) இலங்கையில் அரசியல் மாற்றங்கள் குறித்து இலங்கையர்களே தீர்மானிக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

"இலங்கையில் அரசியல் ரீதியாக என்ன நடைபெறுகின்றது என்பதை அந்த நாட்டின் அரசியலே தீர்மானிக்கவேண்டும். எங்களின் ஒவ்வொரு அயல்நாட்டிற்கும் அவர்கள் இயங்கும் செயற்படும் வழிமுறையுள்ளது. எங்களிற்கு எந்த இயக்கவியல் சரியானது என நாங்கள் கருதுகின்றோமோ அதனை அவர்கள் பின்பற்றவேண்டும் என நாங்கள் பரிந்துரைப்பது எங்கள் நோக்கமல்ல" என ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இது உண்மையான உலகம் நாடுகள் ஒன்றுக்கொன்று அனுசரித்து செயற்படுவதற்கான வழிகளை கண்டு பிடிக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அண்டை நாடுகளின் அரசியல் நிலப்பரப்பை கட்டுப்படுத்துவதற்கு இந்தியா முயலவில்லை. ஒவ்வொரு அயல்நாடுகளின் ஒவ்வொரு அரசியல் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதற்குஇந்தியாமுயல்வதில்லை. ஒவ்வொருநாடும்ஒவ்வொரு இயக்கவியலை கொண்டிருக்கும்.

இந்தியாவின் அயல்நாடுகளின் இயக்கவியலில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும்இந்தஉறவுகளைகையாள்வதற்கான இந்தியாவின் திறன் குறித்து நம்பிக்கை கொண்டுள்ளோம். எங்கள் அயலில் ஒன்றுக்கொன்று சார்ந்திருந்தல், பரஸ்பர நன்மைகள் மற்றும் பழகும் திறன் ஆகியவை எங்கள் நலன்களிற்கு உதவும் என்பது குறித்து நான் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கின்றேன். இந்தஉண்மைகள்தங்களை உறுதிப்படுத்திக்கொள்ளும். இதுவே வரலாறு என இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பொதுத் தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 70 உறுப்புரையின்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## பொதுத் தேர்தல்....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாரம்ஜனாதிபதிக்குபொறுப்பாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய மற்றும் 1981 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் விடயதானங்களுக்கு அமைய 9 ஆவது நாடாளுமன்றம் நேற்று (செவ்வாய்க்கிழமை ) கலைக்கப்பட்டது.

பொதுத்தேர்தலில்போட்டியிடவுள்ளவர்கள் 2024.10.04 ஆம் திகதி முதல் 2024.10.11 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரையான காலப்பகுதியில்வேட்புமனுக்களைகையளிக்க முடியும்.

அதற்கமைய 2024.11.14 ஆம் திகதி வியாழக்கிழமை பொதுத் தேர்தலுக்கான வாக்கெடுப்பை நடத்தவும், 10 ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வை 2024.11. 21 ஆம் திகதி வியாழக்கிழமை நடத்துவதற்கும் தீர்மானித்து ஜனாதிபதியால் அதிவிசேடவர்த்தமானிவெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானிக்கு அமைய தேர்தல் பணிகளை முன்னெடுப்போம். ஜனாதிபதித் தேர்தலின் போது அரச சொத்துக்கள் பயன்பாடு தொடர்பில் வெளியிட்ட சுற்றறிக்கைகள் பொதுத்தேர்தலுக்கும்ஏற்புடையதாகஇருக்கும்.

பொதுத் தேர்தல் தொடர்பிலான சுற்றறிக்கைகளை இன்று அல்லது நாளை வெளியிடவுள்ளோம். 2023 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குப்படுத்தும் சட்டத்துக்கு அமைவாகவே பொதுத்தேர்தல் நடத்தப்படும். பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 5 நாட்களுக்கு பின்னர் தேர்தல் செலவினங்கள் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவோம்.

ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும் நடத்தப்பட்டது. எவ்வித பாரதூரமான சம்பவங்களும் பதிவாகவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு வழங்கிய ஒத்துழைப்பை பொதுத்தேர்தலுக்கும் வழங்குமாறு அரச துறைகளிடமும், நாட்டு மக்களிடமும் வலியுறுத்துகிறோம் என்றார்.

## 9 ஆளுநர்களும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர். மத்திய மாகாண ஆளுநராக பேராதனை பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சரத் பண்டார சமரசிங்க அபயகோன், தென் மாகாண ஆளுநராக சிரேஷ்ட நிர்வாக அதிகாரி பந்துல ஹரிஸ்சந்திர, சப்ரகமுவ மாகாண ஆளுநராக சம்பா ஜானகி ராஜரத்ன, வடமேல் மாகாண ஆளுநராக திஸ்ஸ குமாரசிரி வர்ணசூரிய, மேல் மாகண ஆளுநராக ஹனீஸ் யூசுப், வட மத்திய மாகாண ஆளுநராக வசந்த குமார விமலசிறி, ஊவா மாகாண ஆளுநராக கபில ஜயசேகர ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# மக்களின் நம்பிக்கையை ஜனாதிபதி நிறைவேற்றுவார் என நம்புகிறோம்

## வஜிர அபேவர்த்தன கூறுகிறார்



வங்குரோத்து அடைந்த நாட்டை ரணில் விக்ரமசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் மீட்டு தற்போது அந்த பொறுப்பை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கையளித்திருக்கிறார். புதிய ஜனாதிபதி அந்த பொறுப்பை நிறைவேற்றுவார் என நாங்கள் நம்புகிறோம் என ஐக்கிய தேசிய கட்சியின்தவிசாளர்நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமானசிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதிதேர்தலில்சுயாதீன வேட்பாளராக போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்கவுக்கு பல்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக்கொண்ட மக்கள் வாக்களித்திருந்தனர். அவர்களுக்கு எமது கட்சி சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோன்று நாட்டில் 42 வீதத்துக்கும் அதிகமான மக்கள் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு சாட்டி இருக்கும் பொறுப்பை அல்லது அவரால் முன்வைக்கப்பட்டிருந்த தேர்தல் கொள்கை பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்களைசெயற்படுத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். குறிப்பாக சொல்லப்பட்ட விடயங்களை செயற்படுத்துவதை மக்கள் பாரிய எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர்.

மேலும் இலங்கையின் ஒட்டுமொத்த மக்களுக்கும் இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில்தேர்தல்ஒன்றைநடத்துவதற்குஅல்லது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தபோது இலங்கையை ஸ்திரப்படுத்தி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தேவையான சூழலை ரணில் விக்ரமிங்கவாலே ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. அதற்காக இலங்கை மக்கள் அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

மேலும் ரணில் விக்ரமசிங்க நாட்டை முன்னேற்றுவதற்கு முன்னெடுத்துச்சென்ற வேலைத்திட்டம்,சர்வதேசநாணயநிதியம்,உலகவங்கி, ஆசிய சங்கங்களுக்கிடையில் இடம்பெறும் உலகில் நன்கொடை வழங்கும் குழுக்களுடன் கலந்துரையாடி வங்குரோத்து அடைந்த நாட்டை, வங்குரோத்து நிலையில் இருந்து விடுவித்து, அவர் தயார் செய்துகொண்டு சென்ற வேலைத்திட்டங்களைவிட, இலங்கை மக்கள் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

அப்படியானால் அந்த பொறுப்பை இலங்கை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இலங்கை மக்கள் பொறுப்பெடுத்திருக்கும் அந்த பொறுப்பு தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கிறோம். அதனால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம் ஒன்று ஏற்படாமல் இருப்பதற்கு அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டி இருக்கிறது. – என்றார்.(05)

# மாணவன் மீது பாலியல் துஸ்பிரயோகம்: வவுனியாவில் பயிலுநர் ஆசிரியர் கைது

வவுனியாவில் 14 வயது மாணவன் ஒருவருக்கு பாலியல் துஸ்பிரயோகம் செய்ததாக பயிலுனர் ஆசிரியர் ஒருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட பிரபல பாடசாலை ஒன்றில் கட்டுறு பயிலுனராக பணியாற்றிய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

14வயதுமாணவன்ஒருவருக்குகுறித்தபயிலுனர் பெண் ஆசிரியர் பாலியல் துஸ்பிரயோகம் செய்து வந்ததாகவும், இது தொடர்பில் பாடசாலையில் முறைப்பாடு செய்தும் தீர்வு கிடைக்காத நிலையில் மாணவனின் பெற்றோரால் சிறுவர் பிரிவு மற்றும் வவுனியா பொலிஸ் என்பவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது

முறைப்பாட்டையடுத்து குறித்த மாணவனின் வாக்குமூலம் பெறப்பட்டதுடன், மாணவன் மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வாக்கு மூலத்தின் அடிப்படையில் பயிலுனர் ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# மூன்றாம் கட்ட மீளாய்வுக்கான காலப்பகுதி குறித்து புதிய ஆளும்தரப்புடன் வெகுவிரைவில் பேசுவோம்

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டுவருவதற்குப் பங்களிப்புச்செய்யக்கூடியவகையில் கடின முயற்சிகளின் ஊடாக வென்றெடுக்கப்பட்ட அடைவுகளைத்தொடர்ந்து முன்கொண்டுசெல்வதை இலக்காகக்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனும், அவரது அணியினருடனும் இணைந்து செயற்பட எதிர்பார்த்திருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் கடந்த சனிக்கிழமை நடைபெற்றுமுடிந்தது. இத்தேர்தலுக்கு முன்பதாக சுமார் ஒருமாதகாலம் நாடளாவிய ரீதியில் சகல வேட்பாளர்களாலும் முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களின் பிரதான பேசுபொருளாக பொருளாதார மீட்சியும், சர்வதேச நாணயநிதியத்துடனானபேச்சுகளுமேகாணப்பட்டன.

அதற்கமையதேர்தலுக்குமுன்னர்வொஷிங்டனில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் இலங்கை தொடர்பில் கருத்து வெளியிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜூலி கொஸாக், நாட்டின் பொருளாதார நிலைவரம் வெகுவாக முன்னேற்றமடைந்திருப்பினும் இன்னமும் நெருக்கடியிலிருந்து முழுமையாக மீளவில்லை எனவும், ஆகையால் மிகக்கடின முயற்சிகளின் ஊடாக எட்டப்பட்ட அடைவுகளைப் பாதுகாக்கவேண்டியது மிகவும் அவசியம் எனவும் வலியுறுத்தியிருந்தார்.

அதுமாத்திரமன்றி, எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலின் ஊடாகத் தெரிவாகும் புதிய அரசாங்கத்துடன்நாணயநிதியத்தின்விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டம் தொடர்பான மூன்றாம் கட்ட மீளாய்வு குறித்த கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படும்எனவும்அவர்தெரிவித்திருந்தார்.

தற்போதுநாட்டின்ஒன்பதாவதுநிறைவேற்றதிகார ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவாகியிருக்கும் பின்னணியில், 'கடந்த 2022 ஆம் ஆண்டு முகங்கொடுக்கநேர்ந்த மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீட்சியடைவதற்கு உதவிய, மிகக்கடினமுயற்சிகளின் ஊடாக வென்றெடுக்கப்பட்ட அடைவுகளைத் தொடர்ந்து முன்கொண்டுசெல்லும் நோக்கில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனும், அவரது அணியினருடனும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம்' என சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி 'இலங்கைக்கும், சர்வதேச பிணைமுறிதாரர்களுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதாக அறிவிப்பு வெளியிடப்பட்டமையை வரவேற்கிறோம். இது இலங்கையின்கடன்மறுசீரமைப்புசெயன்முறையில் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் அடையப்பட்டிருப்பதைக் காண்பிக்கிறது' எனக் குறிப்பிட்டுள்ள அவர், சர்வதேச நிதியச் செயற்திட்டம் தொடர்பானமூன்றாம்கட்டமீளாய்வுக்கானகாலப்பகுதி குறித்து இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் நாம் வெகுவிரைவில் கலந்துரையாடுவோம்' என்று அறிவித்துள்ளார்.

(05)

# அரியத்துக்கு விக்கி நன்றி பாராட்டுதல்



பொதுக்கட்டமைப்பின் அழைப்பை ஏற்றுமிகவும்குறுகியஒருகாலப்பகுதியில் எந்தவிதமான முன்னாயத்தங்களும் இல்லாமல் இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனுக்கும், தமிழ் தேசியத்தை நேசித்து அதனை பலப்படுத்தும் வகையில் அரியநேத்திரனுக்கு வாக்களித்த அத்தனை தமிழ் மக்களுக்கும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் நன்றி தெரிவித்துள்ளார்.

நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனுக்கு எனது இதயபூர்வமான நன்றிகளை தமிழ் மக்கள் சார்பாகவும் தமிழ் மக்கள் கூட்டணி சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தவிதமான சுயநலனும் இல்லாமல்தமிழ்தேசியஎழுச்சியின்பால் கொண்ட பற்றுறுதியின் காரணமாக அரியநேத்திரன் இந்தத் தேர்தலில் போட்டியிட முன்வந்தமை தமிழ் மக்களின்மத்தியில்அரசியல்ரீதியானஒரு விழிப்புணர்வையும்அணிதிரட்டலையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

பொதுக்கட்டமைப்பின் அழைப்பை ஏற்றுமிகவும்குறுகியஒருகாலப்பகுதியில் எந்தவிதமான முன்னாயத்தங்களும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட அவர் எந்தவிதமான சலிப்பையோ, தயக்கத்தையோ அல்லது சோர்வையோ வெளிக்காட்டாமல் ஓர் இளைஞர் போன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மூலை முடுக்குகள் எல்லாம்பயணம்செய்துதமிழ்மக்களை அணிதிரட்டுவதற்குப் பாடுபட்டிருந்தார்.

அவரின் இந்த அர்ப்பணிப்பும் கடின உழைப்பும் என்னை மிகவும் ஆச்சரியப்பட வைத்தது. நியமன தினத்தன்று நான் மருத்துவமனையில் இருந்துவந்துஅவருடன்கூடியிருந்ததை ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன். அவரின் கட்டுப் பணத்தை எமது கட்சியின் சிற்பரனே உரிய இடத்தில் கையளித்தார்.

தனது சொந்தக் கட்சிக்குள் இருந்த எதிர்ப்புக்கள், குத்து வெட்டுக்கள் மற்றும் தனது அரசியல் எதிர்காலத்துக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாமல் இந்த தேர்தலில் மிகவும் துணிச்சலாகப் போட்டியிட்டு வடக்குமற்றும்கிழக்குமாகாணங்களின் ஒற்றுமை ஒன்றைவின் குறியீடாக அவர் மிளிர்ந்ததை நான் வரவேற்றுப் பாராட்டுகின்றேன்.

அரியநேத்திரனின் தமிழ் மக்களுக்கான அரசியல் சேவை தொடரவேண்டும் என்றும் அது தமிழ் மக்களுக்கு இன்றைய காலகட்டத்தில் அவசியம் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில்குறிப்பிடவிரும்புகின்றேன். அதேபோலதமிழ்தேசியத்தைநேசித்து அதனை பலப்படுத்தும் வகையில் அரியநேத்திரனுக்கு வாக்களித்த அத்தனை தமிழ் மக்களுக்கும் எனது நன்றிகளை இத்தருணத்தில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

## பொதுத்தேர்தலுக்கு

# தபால்மூல வாக்களிப்புக்கு உடன் விண்ணப்பிக்கலாம்

பொதுத்தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் புதன்கிழமை முதல் ஏற்கப்படும் எனதேர்தல்ஆணையாளர்நாயகம்அறிவித்துள்ளார். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.09.2024இல் வெளியிடப்பெற்றது